தேர்வு நடத்தப்பட வேண்டும் என்பதா அல்லது மத்திய அரசினைக் கண்டித்து ஏதாவது ஒரு தீர்மானத்தினைக் கொண்டுவர வேண்டும் என்பதா? ஹைட்ரோ கார்பன் திட்டமா? மத்திய அரசாங்கத்தை எதிர்த்து ஒரு தீர்மானம் கொண்டு வாருங்கள்; NEET தேர்வா? தீர்மானம் கொண்டு வாருங்கள். உச்ச நீதிமன்றத் தீர்ப்பா? தீர்மானம் கொண்டு வாருங்கள்; இப்படி எதற்கெடுத்தாலும் தீர்மானம் என்று சொன்னால், இதிலிருந்து என்ன தெரிகின்றது; தமிழர்களின் நிலைமை குறித்து தீர்வு காணப்பட வேண்டும் என்ற எந்தவிதக் கோரிக்கையும் தி.மு.க. சார்பில் வைக்கப்படவில்லை. அவர்களுடைய நோக்கம், அவர்களுடைய எண்ணமெல்லாம் இதை வைத்து இந்த அரசுக்கும், மத்திய அரசுக்கும் ஏதேனும் ஒரு சிக்கலை ஏற்படுத்த முடியாதா; அதிலே நாம் குளிர் காயலாமா என்று பார்க்கிறார்கள். எந்த நோக்கமும் பலிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி 5 ஆண்டு காலம் நிலைத்து நிற்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல, தமிழக அரசின் நலனுக்கெதிராக யார், எந்த நிலைப்பாடு எடுத்தாலும் அந்தத் திட்டங்களை இந்த அரசு, அம்மாவினுடைய அரசு என்றைக்கும் கடுமையாக எதிர்க்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.

***திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழவைத்த தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆன்மாவை வணங்கி, சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக, எளியவனான என்னை நியமனம் செய்த, இன்றைக்கு மக்களுடைய பேராதரவோடு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையை வெற்றிகரமாக அவையில் தாக்கல் செய்யவிருக்கிற மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்கி, துணை முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்கி, மறைந்த

2019 ஜூலை 15] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

தமிழக முதல்வர் படிக்காத மேதை பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்தநாளில் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2019 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 9–வது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 67 முதல் 90 வரையிலான 24 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. S. செம்மலை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு 2018–2019 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 75 முதல் 93 வரையிலான 19 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. சு. ரவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, ஏழையெளிய மக்களுக்காக நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

[திரு. சு. ரவி] [2019 ஜூலை 15

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2019 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 6–வது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(உ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில்கொள்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆன்மாவை வணங்கி, நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்கி, துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, உங்களுடைய அனுமதியோடு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2019 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 57 முதல் 74 வரையிலான 18 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஊ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.

***திரு. ப. சத்திய நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு வணங்கி, நாங்கள் நித்தம் வணங்குகின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்கி, தமிழ்நாட்டிலே அம்மாவிற்குப் பிறகு நாங்கள் இருக்கிறோம் என்று கழகத்தையும் ஆட்சியையும் கட்டிக் காத்து சிறப்பாக நடத்தி வருகின்ற ஆற்றல் மிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 2–வது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.